புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 247 | 13-03-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 247 | 13-03-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## “மத்திய கிழக்கில் இந்தியர்களை தவிக்க விடமாட்டோம்!” : பிரதமர் மோடி உறுதி



கொச்சி: மார்ச். 13–

கேரள மாநிலம் கொச்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, “போர் குறித்த நிலைமையை அரசாங்கம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. மேற்கு ஆசியா முழுவதும் வாழும் மற்றும் பணி புரியும் இந்தியர்களுக்கு உதவுவதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைத்து வருகிறோம்.

தற்போதைய பதற்றங்களின்போது வளைகுடா நாடுகள், அங்கு பணிபுரியும் இந்தியர்கள் மீது மிகுந்த அக்கறை காட்டுகின்றன. அதற்காக நான் அவர்களுக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

தற்போதைய மேற்கு ஆசிய நெருக்கடியில் அரசியல் விளையாடுகிறது. வெளிநாடுகளில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை அரசியலாக்கக் கூடாது” என்றார்.

ஈரான் அமெரிக்க போரால் மேற்கு ஆசியாவில் உள்ள ஆயிரக்கணக்கான இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், பிரதமர் மோடியின் இந்தக் கருத்துகள் வந்துள்ளன.

(புதன்கிழமை) அதிகாலை இஸ்ரேல் மற்றும் பல வளைகுடா நாடுகள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் புதிய அலையை ஈரான் தொடங்கியது. டெல் அவிவ் மற்றும் இஸ்ரேலின் பிற பகுதிகளில், மூன்று ஈரானிய வான்வெளி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கப் படைகளால் கூட்டாக இயக்கப்படும் ஒரு முக்கிய தளமான பிரின்ஸ் சுல்தான் விமான தளத்தை நோக்கிச் சென்ற ஆறு பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாக சவுதி பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. சவுதியின் கிழக்கு நகரமான ஹஃபர் அல்படின் மீது இரண்டு ட்ரோன்களையும் வான் பாதுகாப்புப் படைகள் சுட்டு வீழ்த்தின.

ஓமனுக்கு வடக்கே உள்ள ஹார்முஸ் ஜலசந்தியில் ஒரு சரக்குக் கப்பல் தாக்கப்பட்டது. இதனால் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஈரான் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. மேலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள ராஸ் அல் கைமா அருகே ஒரு சரக்கு கப்பலின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

பாரசீக வளைகுடாவில் மற்றொரு கப்பலும் ஒரு ஏவுகணையால் தாக்கப்பட்டது. இதுவரை சவுதியில் ஈரான் நடத்திய தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும், 122 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எரிபொருள் தட்டுப்பாடு அச்சம் வேண்டாம்

## பொது மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை: மார்ச். 13–

“போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ, பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்” என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “மேற்காசியப் போர்ச்சூழல் காரணமாக, தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை எதிர்கொள்ள, இரண்டு நாட்களுக்கு முன்பு உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டதோடு, சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு பெட்ரோல் டீசல் உள்ளிட்ட எரிபொருள் விநியோகம் குறித்து பிரதமருக்கும், தொடர்புடைய ஒன்றிய அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில், எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டமும் நேற்று நடைபெற்றுள்ளது. இவ்விவகாரத்தில் ஒன்றிய அரசு மேலும் தீவிரமாகக் கவனம் செலுத்திட நாடாளுமன்ற வளாகத்திலும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.

போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்நேரத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் துணை நின்று மேற்காசியப் போர்ச்சூழலை எதிர்கொள்வோம்” எனத் தெரிவித்துள்ளார்.

## ஆர்.என்.ரவி மேற்குவங்க மாநிலத்துக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் தமிழகத்தின் புதிய பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவியேற்பு




சென்னை: மார்ச்.13–

தமிழக ஆளுநராக கடந்த 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் தேதி முதல் பணியாற்றி வந்த ஆர்.என்.ரவி அதிரடியாக மேற்குவங்க மாநிலத்திற்கு மாற்றப்பட்டு, தமிழகத்தின் புதிய பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கடந்த வாரம் ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டார். தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக நேற்று மதியம் பதவி யேற்பதை முன்னிட்டு, ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் இன்று அதிகாலை 12.15 மணிக்கு கொச்சியில் இருந்து சென்னை விமான நிலையம் வந்தார். அவருக்கு தமிழக அரசு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. பின்னர் காரில் புறப்பட்டு கிண்டி ராஜ்பவனுக்கு சென்றார்.

இதையடுத்து ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நேற்று மதியம் 12.30 மணிக்கு சென்னை, கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார். சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தற்போது கேரளா மாநில ஆளுநராக பணியாற்றி வரும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தமிழகத்தின் கூடுதல் பொறுப்பையும் கவனிப்பார். பதவியேற்பு விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின், சபாநாயகர் அப்பாவு மற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர் .கே.பன்னீர் செல்வம், ரகுபதி, தா.மோ.அன்பரசன் உள்ளிட்ட அமைச்சர்கள், ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், தலைமை செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு விழா முடிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிய பொறுப்பு ஆளுநருக்கு சால்வை மற்றும் மலர்க்கொத்து கொடுத்து வாழ்த்தினார். அவரது மனைவிக்கும் மலர்க்கொத்து கொடுத்து வாழ்த்தினார். இதையடுத்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும் ஆளுநருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார்.

கோவாவைச் சேர்ந்த இவர், அம்மாநில சட்டப்பேரவை தலைவராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். ஏற்கனவே இமாச்சலப் பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் ஆளுநராக பணியாற்றிய இவரது அனுபவம், தமிழகத்தின் தற்போதைய சூழலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசுக்கும் இடையே பல்வேறு விவகாரங்களில் முரண்பாடுகள் நிலவி வந்த சூழலில், ஆர்.என். ரவியின் இடமாற்றம் மற்றும் புதிய பொறுப்பு ஆளுநரின் நியமனம் அரசியல் ரீதியாக பெரிதும் பேசப்படுகிறது. தமிழ்நாட்டிற்கு நிரந்தர ஆளுநர் நியமிக்கப்படும் வரை ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் இந்த பொறுப்பில் நீடிப்பார்.

இந்நிலையில், ஆர்.என்.ரவி மேற்குவங்க மாநிலத்துக்கு மாற்றப்பட்டு நிலையில், தமிழக ஆளுநர் பொறுப்பில் இருந்து நேற்று காலை விடைபெற்றார். இதையடுத்து நேற்று காலை 9 மணிக்கு கிண்டி கவர்னர் மாளிகையில் இருந்து புறப்பட்டு, காலை 9.30 மணியளவில் சென்னை பழைய விமான நிலையத்துக்கு வந்தார். அங்கு தமிழ்நாடு காவல் துறையினர் அணிவகுப்பு மரியாதை செய்து வழியனுப்பி வைத்தனர். ஆர்.என். ரவியுடன் அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் காலை 9.50 மணிக்கு ஏர் இந்தியா விமானத்தில் சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றனர். டெல்லியில் இருந்து மேற்குவங்க மாநிலம் கொல்கத்தா சென்று அங்கு புதிய ஆளுநராக விரைவில் பொறுப்பேற்பார் என்று கூறப்படுகிறது

## ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி

புதுடெல்லி: மார்ச்.13–

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரானுக்கு எதிராக கடந்த பிப். 28ம் தேதி தாக்குதல்களைத் தொடங்கின. இதையடுத்து, இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளைக் குறிவைத்தும் ஈரான் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதன் காரணமாக, ஈரானின் ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக நடந்து வந்த கப்பல் போக்குவரத்துக்கு ஈரான் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது தொடர்பாக ஈரானின் கடற்படை தளபதி அலிரேசா தாங்சிரி வெளியிட்ட சமூக ஊடக பதிவில், ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல விரும்பும் கப்பல்கள் முதலில் ஈரானின் அனுமதியைப் பெற வேண்டும். இல்லையெனில் அவை ஈரானின் தாக்குதலுக்கான இலக்காக மாறக்கூடும்.

ஈரானின் எச்சரிக்கைகளை புறக்கணித்த எக்ஸ்பிரஸ் ரோம், மயூரி நரீ ஆகிய இரண்டு கப்பல்கள் புதன்கிழமை தாக்கப்பட்டன. அவர்கள் பொய்யான வாக்குறுதிகளை நம்பி எச்சரிக்கைகளை புறக்கணித்து ஜலசந்தியை கடக்க முயன்றார்கள்; ஆனால் அவர்கள் பிடிக்கப்பட்டனர். அந்த வழியாகச் செல்ல விரும்பும் எந்தக் கப்பலும் ஈரானிடமிருந்து அனுமதி பெற வேண்டும்,” என்று தெரிவித்திருந்தார்.

ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களுக்கான விதிமுறைகளை ஈரான் மேலும் கடுமைப் படுத்தியுள்ளதாகவும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நலன்களுக்கு ஆதரவாக இல்லாத கப்பல்கள் மட்டுமே அந்த பாதை வழியாக பாதுகாப்பாக செல்லலாம் என்றும் ஈரான் அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இந்தியக் கொடி ஏற்றப்பட்ட கப்பல்கள் ஹோர்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடந்து செல்ல அனுமதிக்க ஈரான் அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் (புதன்கிழமை) வெளியிட்ட தகவலின்படி, பெர்ஷிய வளைகுடா பகுதியில் தற்போது 28 இந்தியக் கொடி ஏற்றப்பட்ட கப்பல்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 24 கப்பல்கள் ஹோர்முஸ் ஜலசந்தியின் மேற்கு பகுதியில் 677 இந்திய கப்பல் பணியாளர்களுடன் உள்ளன. மேலும் 4 கப்பல்கள் ஜலசந்தியின் கிழக்கு பகுதியில் 101 இந்திய கப்பல் பணியாளர்களுடன் உள்ளன. அவர்களின் பாதுகாப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் கடற்கரையும் ஓமான் நாட்டையும் பிரிக்கும் குறுகிய கடல் பாதையான ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக தினமும் 2 கோடிக்கும் அதிகமான பேரல்களுடன் கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்படுகிறது. இது உலகளாவிய எண்ணெய் பயன்பாட்டில் ஐந்தில் ஒரு பகுதி; கடல் வழியாக நடைபெறும் எண்ணெய் வர்த்தகத்தில் நான்கில் ஒரு பகுதி. உலகின் திரவ இயற்கை எரிவாயு (லிழிநி) வர்த்தகமும் குறிப்பிடத்தக்க அளவு இதே வழியாகச் செல்கிறது. இந்த போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டாலும் அதன் தாக்கம் உலக நிதி சந்தைகள் முதல் குடும்பங்கள் வரை இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் இனாம் நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட பத்திரப்பதிவு தடை மற்றும் தகுதிவாய்ந்த பட்டா நிலங்களின் வழிகாட்டி மதிப்பினை பூஜ்ஜியம் என மதிப்பீடு வழங்கப்பட்ட தடையினை நீக்குவது தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (பதிவுகள் சரிபார்ப்பு) திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர்) மயில், ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, உதவி இயக்குனர் ஜெய்சிவக்குமார், ஈரோடு தேசிய தகவலியல் அலுவலர் ஜெகன் மற்றும் ஈரோடு மற்றும் கோபிசெட்டிப்பாளையம் மாவட்ட பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் “நெகிழி இல்லா திருவள்ளூர் மாவட்டம்” (ம) “மீண்டும் மஞ்சப்பை” திட்டத்தில் நெகிழி பொருட்கள் சோதனைச் சாவடி : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் திறந்து வைத்தார்




திருவள்ளூர் மார்ச் 13 :

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அடிவாரத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் “நெகிழி இல்லா திருவள்ளூர் மாவட்டம்” (ம) “மீண்டும் மஞ்சப்பை” திட்டத்தில் திருக்கோவில் வளாகத்தை நெகிழி இல்லா வளாகமாக மாற்றும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நெகிழி பொருட்கள் சோதனைச் சாவடியை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் திறந்து வைத்து, 1000 பொது மக்களுக்கு மஞ்சப்பைகளை வழங்கினார்.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பொதுமக்களிடம் நெகிழி ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடி நெகிழி இல்லா திருத்தணியாக மாற்றிட வேண்டுமென கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் கடைகளுக்கு துணிப்பைகள் மற்றும் பாத்திரங்களைக் கொண்டுச் சென்று காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவு பொருட்களை பெற வேண்டும் இவ்வாறு நாம் நடைமுறைப் படுத்தும் பட்சத்தில் நெகிழி பயன்பாடுகள் படிப்படியாக குறைந்து முற்றிலும் நெகிழி இல்லா சூழ்நிலை ஏற்பட்டு சுற்றுச்சூழல் சீர்கேடு இல்லாமல் இருக்கும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இதில் திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர் சுப்பையா,திருவள்ளூர் மாசுகட்டுப்பாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வ இளவரசி, திருத்தணி நகராட்சி ஆணையர் கன்னியப்பன் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாமக உள்ளிட்ட மாற்று கட்சியினர்25க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்



விழுப்புரம், மார்ச்.13–

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பாமக உள்ளிட்ட மாற்று கட்சியினர் திமுகவில் இணையும் விழா செஞ்சியில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஏற்பாட்டில் செஞ்சி கிழக்கு ஒன்றிய பாமக முன்னாள் ஒன்றிய செயலாளர்பிரபு தலைமையில் ஒட்டம்பட்டு , திருவதி குணம், சிட்டாம் பூண்டி ஆகிய ஊராட்சி சேர்ந்த பாமக நிர்வாகிகள் கார்த்தி, வினோத் ,தீனதயாளன், தமிழ், ஆனந்த், பர்கத், பிகாஷ்,குமார், முருகன், சஞ்சய்.சங்கர், ஜெயகுமார் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் 25க்கும் மேற்பட்டோர் அக் கட்சியிலிருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

திமுகவில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்து நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் அனைவரும் கடுமையாக உழைத்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்திடவேண்டும்என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,செஞ்சி ஒன்றிய வரதகர் அணி அமைப்பாளர் விநாயக மூர்த்தி, தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பொதுமக்கள் புகார் அளிக்க காவல் நிலையங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை தமிழகத்தில் முதல் முறையாக வாட்ஸ் அப்பில் புகார் அளிக்கும் சேவையை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிமுகப்படுத்தியுள்ளார்.




கோவை: மார்ச்13

கோவை மாவட்ட காவல்துறை சார்பில் “Kovai Digi Cop” என்ற Whatsapp Chat Bot என்ற சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இதனை கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், மேற்கு மண்டல காவல்துறை தலைவர் சரவணசுந்தர், கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் இன்று துவக்கி வைத்தனர்.

98400 91100 என்ற எண் மூலம் Whatsapp ChatBot சேவையை பெறலாம். இதில் ஆன்லைன் புகார் , சைபர்கிரைம் புகார் , புகாரின் விசாரணை நிலைகள், அருகில் உள்ள காவல் நிலையங்கள், இரவு நேர ரோந்து காவலர்களின் விவரங்கள், போதை பொருள் பயன்பாடு குறித்த தகவல்களை காவல் துறையினருக்கு தெரிவிப்பது, பெண்களுக்கு எதிரான குற்றங்களை தெரிவித்தல் புகார் அளித்தல், எமர்ஜென்சி சேவை எண்கள், வாகனங்களின் விவரங்கள், பெண்கள் பாதுகாப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு பயன்படுத்தலாம். இதனை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விரிவாக விளக்கினார்.

இது குறித்து பேட்டியளித்த காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், இந்த ChatBot மூலம் புகார் அளிக்கும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பொதுமக்கள் அவர்களுடைய சந்தேகங்கள் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் சேவைகள் வழங்கப்பட்டுள்ள தாக தெரிவித்தார்.

தற்பொழுது மாவட்ட காவல் துறை எல்லைகளில் மட்டும் இதை பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாகவும் கூடிய விரைவில் மாநகருக்கும் விரிவு படுத்த இருப்பதாக தெரிவித்தார். மேலும் இதற்காகவே கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சிலிண்டர்களை சட்ட விரோதமாக விற்பனை செய்ய படுகிறதா என அறிவதற்கு ஸ்பெஷல் பிரான்ச் மூலம் தகவல்களை திரட்டி வருவதாகவும் அவ்வாறு குற்றங்கள் நேர்ந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் ராஜாம்புலியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சார்பில் உலக மகளிர் தின விழா



செஞ்சி மார்ச் 13

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் ராஜாம்புலியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் ராஜாம்புலியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சார்பில் உலக மகளிர் தின விழா தமிழ்நாடு அறிவியல் இயக்கம் விழுப்புரம் மாவட்ட பொருளாளர் சங்கர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது .

பட்டதாரி ஆசிரியர் ஷாலினி அனைவரையும் வரவேற்றார் .

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாநில பொதுக்குழு உறுப்பினர் வாசு கார்த்திகேயன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக வல்லம் ஒன்றிய மாவட்ட பொறுப்பாளர் தென்னரசு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பெண் ஆசிரியர்கள் சத்துணவு அமைப்பாளர்கள் அங்கன்வாடி பணியாளர்கள் சமையல் உதவியாளர்கள் என அனைத்து பெண்களுக்கும் சால்வை அணிவித்து கேடயம் வழங்கி நினைவு பரிசு வழங்கி பெண்கள் தின வாழ்த்துக்கள் கூறினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்வ இளங்கோவன் வல்லம் ஒன்றிய செயலாளர் வசந்த் வல்லம் ஒன்றிய துணை செயலாளர் நமச்சிவாயம் வானவில் மன்ற கருத்தாளர்கள் மகாலட்சுமி கிரிஜா பள்ளி ஆசிரியைகள் சபிதா கலைவாணி சத்யா மற்றும் அருகில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் பூங்குழலி தொழில்நுட்ப ஆய்வக உதவியாளர் தபசும் சத்துணவு அமைப்பாளர் கனகசுபா சமையல் உதவியாளர் ராணி உஷா கவிதா அங்கன்வாடி பணியாளர் இலக்கியா மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் வரும் 13 ம் தேதி நடைபெறும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவிப்பு :

திருவள்ளூர் மார்ச் 13 :

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் வருவாய் கோட்ட அளவில் 13.03.2026 அன்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய வருவாய் கோட்ட அலுவலகங்களில் சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் தலைமையில் நடத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் உத்தரவிட்டுள்ளார்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் விவசாயம் தொடர்பாக தங்களுக்கும் தங்கள் பகுதிகளில் ஏற்படும் குறைகளுக்கும் தீர்வு காண அந்தந்த வருவாய் கோட்டாங்களில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை. வேளாண்மைப் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவு துறை, வங்கிகள் துறை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மின் வாரியம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பொதுப்பணித்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

வருவாய் கோட்ட அளவில் தீர்க்கப்படாத மனுக்கள் மட்டும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை!!

சென்னை: மார்ச்.13–

கட்சி உரிமை தொடர்பாக அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கட்சி பெயர், சின்னத்தை அன்புமணி பயன்படுத்துவதை எதிர்த்து உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் வழக்கு தொடர்ந்திருந்தார். அன்புமணிக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது

## கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் எம் எல் ஏ மதியழகன் நேரில் ஆய்வு



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் வருகின்ற மார்ச் 13 – 14 தேதிகளில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கழக சார்பு அணிகள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்காக மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதய நிதி ஸ்டாலின் வருகையையொட்டி சுங்கச்சாவடி அருகிலுள்ள கலைஞர் திடல் மற்றும் ஸ்ரீ தேவராஜ் மஹாலில் நடைபெறயுள்ள கழக நிகழ்ச்சி மற்றும் பையூர் – ஒப்பதவாடி ஆகிய ஊராட்சிகளில் கழக கொடியேற்றம் விழா நடைபெறும் இடம் மற்றும் முன்னேற்பாடு பணிகளை கழக நிர்வாகிகளுடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் எம் எல் ஏ மதியழகன் நேரில் சென்று ஆய்வு.

## தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் மாபெரும் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்




கிருஷ்ணகிரி, மார்ச்.13–

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் பார்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சந்தூரில் மாபெரும் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் தலைவர் விஜய் அறிவுறுத்தலின்படி, கட்சியின் கொள்கைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் E. முரளிவிஜய்.B.E. LLB தலைமையில் நடைபெற்ற

இக்கூட்டத்தில், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சேலம் மண்டல தொழில்நுட்ப அணி செயலாளர் ஜெயசூர்யா, பார்கூர் தெற்கு ஒன்றிய செயலாளர் T. வெங்கடேசன், பார்கூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசவராஜ், பார்கூர் மத்திய ஒன்றிய செயலாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சுகுமார், மிதுன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சத்யராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் பார்கூர் தெற்கு ஒன்றிய பொருளாளர் M. சூர்யா, செயற்குழு உறுப்பினர் V.மஞ்சுநாதன், ஊராட்சி பொறுப்பாளர் M.கார்த்திக், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.பி. தேவராஜன் மற்றும் தொழிலதிபர் அசோகன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

காட்டாகரம் ஊராட்சி, சந்தூரில் திரண்டிருந்த ஏராளமான தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடையே உரையாற்றிய நிர்வாகிகள், தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைகளை அடித்தட்டு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் நகர கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் எனப் 500க்கும் மேற்பட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர் 500 பேருக்கு பிரியாணி வழங்கப்பட்டது பலர் திரளாகப் பங்கேற்று இக்கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

## குறிசொல்வது போல் 5 சவரன் நகைகளை அபேஸ் செய்த சேலம் சுதாகர்.



சேலம். மார்ச்.13–

மயிலாடுதுறை அருகே பழையகூடலூரில் பெண்ணிடம் குறிசொல்வது போல் ஏமாற்றி தாலிச்சங்கிலி உள்பட தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குற்றவாளியை தேடிச் சென்று மேல்மருவத்தூரில் தட்டித் தூக்கி கைது செய்த தனிப்படை போலீசாருக்கு எஸ்.பி பாராட்டுகளை தெரிவித்தார்.

யாரோ செய்வினை செய்துள்ளார்கள்: குத்தாலம் தாலுக்கா பாலையூர் காவல் சரகத்துக்கு உட்பட்ட பழையகூடலூர் வடக்கு காலனி தெருவில் ஆசைத்தம்பி என்பவர் மனைவி கண்ணகி(52) மற்றும் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். கடந்த மாதம் 26ஆம் தேதி குறிசொல்பவர் போல வேடமிட்டு இருசக்கர வாகனத்தில் வந்த நபர் கண்ணகியிடம், உங்கள் வீட்டில் யாரோ செய்வினை செய்துள்ளார்கள். இதனால் உங்கள் வீட்டில் நீண்ட நாட்களாக குடும்ப பிரச்சனை நிலவி வருகிறது என்று கூறியுள்ளார்.

தாலியை கோயிலில் வைத்து பூஜை: செய்வினைக்கு பரிகாரம் செய்ய கண்ணகி கழுத்தில் அணிந்திருந்த தாலிச் சங்கிலியை அருகில் உள்ள கோயிலில் வைத்து பூஜை செய்தால் பிரச்சனை தீரும் என்று கூறியுள்ளார். இதனை நம்பிய கண்ணகி தனது கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்கச்சங்கிலி மற்றும் 1 கிராம் தங்க மோதிரத்தை அவரிடம் கொடுத்துள்ளார். பின்னர், அருகில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு செல்வதாக கூறி சென்ற நபர், ஏமாற்றிவிட்டு நகையுடன் அங்கிருந்து தப்பிச்சென்று விட்டார். இச்சம்பவம் தொடர்பாக கண்ணகி கொடுத்த புகாரின் பேரில் பாலையூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுபடி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளியை கைது செய்யவும், திருடு போன சொத்துக்களை மீட்கவும், மயிலாடுதுறை சிறப்பு உதவி ஆய்வாளர் நரசிம்மபாரதி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

நகைகளை திருடிக்கொண்டு ஓடிய நபர்: தனிப்படையினர் மேற்கொண்ட விசாரணையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர் சேலம் மாவட்டம் மேட்டூர் தாலுக்கா குளத்தூர் பரிசல்துறை வண்ணவாடி ரோடு பகுதியை சேர்ந்த பழனி மகன் சுதாகர்(20) என்பதும், அவர் ஊர்ஊராக சென்று இதுபோன்று மோசடிகளில் ஈடுபடுவதும் தெரிய வந்தது. இதையடுத்து, அவரை பல இடங்களில் தேடிய தனிப்படை போலீஸார் மேல்மருவத்தூரில் வைத்து சுதாகரை கடந்த 9ஆம் தேதி கைது செய்தனர்.

மேல்மருவத்தூரில் வைத்து கைது செய்த போலீசார்

வழக்கில் திருடு போன நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் சுதாகர் திருட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு, அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்டு எதிரியை விரைவாக கண்டுபிடித்து அவர் திருடி சென்ற சொத்துக்களை மீட்டெடுத்த மயிலாடுதுறை உட்கோட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் நரசிம்மபாரதி தலைமையிலான தனிப்படையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் பாராட்டினார்.

## சிலிண்டர் தட்டுப்பாடு: சென்னையில் 215 ஹோட்டல்கள் மூடல்

வணிக லிறிநி சிலிண்டர் தட்டுப்பாட்டால், சென்னையில் 215 சிறிய மற்றும் நடுத்தர உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தகவல் தெரிவித்துள்ளனர். பெரிய அளவிலான உணவகங்கள் விறகு, மின்சார அடுப்புகளுக்கு மாறியுள்ளன. கியாஸ் வருகையைப் பொறுத்து அவ்வப்போது ஹோட்டல்களை திறப்பதும், உணவு வகைகளைக் கணிசமாகக் குறைத்தும் விற்பனையை மேற்கொள்கின்றனர்.

# மங்கலம் தொகுதி என்.ஆர்.காங்., சார்பில் மகளிர் தின விழா கொண்டாட்டம் வெகு சிறப்பான முறையில் நடைபெற்றது





புதுச்சேரி, மார்ச். 13–

மங்கலம் தொகுதி என்.ஆர்.காங்., மற்றும் காமாட்சி அம்மாள் அறக்கட்டளை சார்பில் உலக மகளிர் தின விழா கொண்டாடினர். விழாவிற்கு காமாட்சி அம்மாள் அறக்கட்டளை நிறுவன தலைவர் மோகித் ரவிக்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் சேர்மன் ரேவதிபர்குணன், முன்னாள் கவுன்சிலர் ரமேஷ், மாநில மாணவர் அணி தலைவர் குகன், பாலகிருஷ்ணன், சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொகுதி தலைவி பிரபாவதி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக என்.ஆர்.காங்., பொதுச்செயலாளர் ஜெயபால் பங்கேற்று பேசியதாவது: முதல்வர் ரங்கசாமி மகளிர்ருக்கு பாதி கட்டணத்தில் பத்திரபதிவு, மகளிர் உரிமை தொகை, பிறக்கும் பெண் குழந்தைகள் பெயரில் ரூ.50 ஆயிரம் டெபாசில் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கி இந்தியாவிற்கே முன்னோடியாக இருக்கின்றார். மக்களுக்கு சேவை செய்ய மனம் இருக்கவேண்டும். சிலர் பதிவிக்கு வந்ததும், உடன் இருக்கும் கட்சியினரை மதிப்பது கிடையாது, தொகுதி மக்களை அனுசரித்து நடந்துகொள்வது கிடையாது, கட்சியை மதிப்பதே கிடையாது, குறைந்தபட்சம் ஒரு பத்துபேருக்காவது நல்லது செய்யவேண்டும் அப்போதுதான் வளரமுடியும். ரவிக்குமாருக்கு சேவை மனதுடன், பணிவு, அடக்கம் மற்றும் அன்பு நிறைந்துள்ளதால் அவருடைய லட்சியம் நிச்சயம் நிறைவேறும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னாள் சேர்மன் பாலமுருகன், வட்டார மக்கள் இயக்கம் முரளிதரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் சிவக்குமார், தங்கராசு, அரி கிருஷ்ணன், மோகன்தாஸ், நடராஜன், இளங்கோ ,பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட தொகுதி மகளிர்சுயஉதவிக்குழுவை சேர்ந்த ஆயிரத்து 700 மகளிருக்கு பரிசுபொருள் வழங்கி வாழ்த்தினர். மகளிர் அணி மகேஸ்வரி நன்றி கூறினார்.

# வில்லியனூர் தொகுதியில் ரூ. 93.55 லட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !







புதுச்சேரி, மார்ச்.13–

வில்லியனூர் சட்டமன்ற தொகுதி ஒதியம்பட்டு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட பழநியப்பா நகர் மற்றும் மெடிமிக்ஸ் ரோட்டிற்கு பொதுப்பணித்துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் வடக்கு பிரிவு மூலம் ரூ. 40.80 லட்சம் செலவில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணி, வி. மணவெளி கிராமத்திற்கு உட்பட்ட விஜபி நகரில் ரூ. 48.76 லட்சம் செலவில் புதிய சாலை அமைக்கும் பணி மற்றும் ஒதியம்பட்டு ராமலிங்கனார் தெருவிற்கு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூ. 3.99 லட்சம் செலவில் குடிநீர் குழாய் புதைக்கும் பணி என மொத்தம் ரூ. 93.55 லட்சம் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, சாலை மற்றும் குடிநீர் குழாய் புதைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சந்திரகுமார், வில்லியனூர் கொம்யூன் ஆணையர் பிரபாகரன், உதவிப் பொறியாளர்கள் நடராஜன், சத்திய நாராயணா, இளநிலைப் பொறியாளர் ராஜா தினேஷ், ஒதியம்பட்டு ஊர் முக்கியஸ்தர்கள் கபிரியேல், குலசேகரன், மூர்த்தி, மாரிமுத்து, விநாயகம், ஆனந்த், ராமலிங்கம், திருவேங்கடம், பாலு, நாகமுத்து, சுதாகர், வேலவன், வினோத், சிவானந்தம், விசு, அல்லாபிச்சை, ராஜன், முருகாணந்தம், பிரசாந்த், ஜீவா, சகாயராஜ், சுந்தரம், மோகன், சந்தோஷ், ராஜா, வி. மணவெளி கிராம முக்கியஸ்தர்கள் தர்மராஜ், கலியபெருமாள், ஜீவா, வாசு, அருள், பிரபாகரன், வேலு, மோகன், இருசப்பன், கோவிந்தன், தீனதயாளன், கிருஷ்ணமூர்த்தி, ரமேஷ், தியாகராஜன், ஆறுமுகம், செல்வம், பாலசுப்ரமணி, சசி மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், சிறு பான்மையினர் அணி அமைப்பாளர் முகம்மது ஹாலித், தொமுச அங்காளன், துணை அமைப்பாளர்கள் சரவணன், ராமதாஸ், கோபி, தேசிகன், துணைத் தலைவர் கதிரவன், பொருளாளர் கந்தசாமி, செயற்குழு உறுப்பினர் சுப்ரமணி, கிளைக் கழகநிர்வாகிகள் தேவநாதன், ஜனா, பிஆர்டிசி பாஸ்கர், கார்த்திகேயன், செல்வநாயகம், துர்கா நகர் ரமேஷ், மிலிட்டரி முருகன், அருண், சேகர், ஜெயபால், திருமலை, மதியழகன், சந்திரசேகர், ரமேஷ், லத்தீப், அலீஸ்டர், விந்தியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சாதனை வீராங்கனை சங்கவிக்கு நேரில் வாழ்த்து:

# லட்சிய ஜனநாயகக் கட்சியின் கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் தாடி பாலாஜி நெட்டப்பாக்கத்தில் சந்திப்பு!





புதுச்சேரி: மார்ச்.13–

சர்வதேச தற்காப்புக் கலைப் போட்டிகளில் தங்கம் வென்று சாதனை படைத்து வரும் புதுச்சேரி, நெட்டப்பாக்கத்தைச் சேர்ந்த மாணவி சங்கவியை, லட்சிய ஜனநாயகக் கட்சியின் கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் தாடி பாலாஜி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, நெட்டப்பாக்கத்திற்கு வருகை தந்த தாடி பாலாஜி, சாதனைப் பெண் சங்கவியை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது, தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் மாணவியிடம் பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக, மாணவியின் வெற்றிக்காக நெட்டப்பாக்கம் பத்வதவர்த்தினி சமேத ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்பட்டன.

பதக்கங்களை பார்வையிட்டார்:

சங்கவியின் வீட்டிற்குச் சென்ற தாடி பாலாஜி, அவர் இதுவரை வென்றுள்ள 35க்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்கள் மற்றும் 20 வெள்ளிப் பதக்கங்களைப் பார்வையிட்டார். கராத்தே, கிக் பாக்ஸிங், மல்யுத்தம் எனப் பல துறைகளில் சங்கவி படைத்துள்ள சாதனைகளைக் கேட்டறிந்து பாராட்டினார்.

சந்திப்பின் போது தாடி பாலாஜி பேசுகையில்,

"மாணவி சங்கவியின் சாதனைகள் பெருமைக்குரியவை. உங்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கும், லட்சியப் பயணத்திற்கும் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் எப்போதும் உறுதுணையாக இருப்பார். விரைவில் டெல்லியில் நடைபெற உள்ள போட்டியில் வெற்றி பெற்று இந்தியாவிற்குப் பெருமை சேர்க்க வேண்டும்," எனத் தெரிவித்தார்.

இந்த நெகிழ்ச்சியான சந்திப்பின் போது யிசிவி மன்றத் தலைவர் பூபதி மற்றும் அப்பகுதி பொதுமக்கள் உடனிருந்து மாணவியின் திறமைகளைப் பாராட்டி மகிழ்ந்தனர். 2026ல் ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கத் தயாராகி வரும் சங்கவிக்கு, அரசுத் தரப்பிலிருந்து உரிய உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாக உள்ளது.

# பெட்ரோல் தட்டுப்பாடு வதந்தி: பங்குகளில் அலைமோதும் கூட்டம்: ஊழியர்கள் விளக்கம்!





புதுச்சேரி, மார்ச்.13–

பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படப் போவதாகப் பரவிய வதந்தியால், நேற்று மாலை முதல் புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் உள்ள பெட்ரோல் பங்குகளில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது.

நேற்று மாலை முதல் சமூக வலைதளங்களில் பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் பரவின. இதனால் அதிர்ச்சியடைந்த பொதுமக்கள், முன்னெச்சரிக்கையாகத் தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பத் தொடங்கினர். இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததோடு மட்டுமல்லாமல், எதிர்காலத் தேவைக்காக கேன் மற்றும் பாட்டில்களில் எரிபொருளை வாங்க மக்கள் ஒருவரையொருவர் முட்டி மோதிக் கொண்டு ஆர்வம் காட்டினர்.

இந்தக் குழப்பமான சூழல் குறித்து பெட்ரோல் பங்க் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்கள் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது,

"பெட்ரோல் மற்றும் டீசல் லோடுகள் தடையின்றி தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. கையிருப்பில் எந்தக் குறையும் இல்லை. யாரோ திட்டமிட்டுப் பரப்பிய வதந்தியை நம்பி பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம். அனைவருக்கும் தேவையான எரிபொருள் எங்களிடம் உள்ளது."

ஊழியர்களின் இந்த விளக்கத்தைத் தொடர்ந்து மக்கள் சற்று நிம்மதியடைந்தாலும், உலகளாவிய யுத்தச் சூழல் (War context) காரணமாக எரிபொருள் இறக்குமதி பாதிக்கப்படலாம் என்ற அச்சம் ஒரு தரப்பினரிடையே நீடிக்கிறது. இதனால், "இதை நம்பலாமா வேண்டாமா?" என்ற இரட்டை மனநிலையில் பொதுமக்கள் இன்னும் காணப்படுகின்றனர்.

தற்போதைய நிலவரப்படி, அரசு அல்லது எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் தட்டுப்பாடு குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் ஏதும் வரவில்லை. எனவே, வதந்திகளை நம்பி பாட்டில்களில் எரிபொருளைச் சேமித்து வைப்பது ஆபத்தானது என்றும், பதற்றமின்றி செயல்படுமாறும் சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு பார்சல் டீ, காபி விலை உயர்வு

"சேலம்:அமெரிக்காஈரான் போர் காரணமாக உலகம் முழுவதும் கியாஸ், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சேலம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஓட்டல்கள், டீ கடைகள், பேக்கரிகள் மூடும் நிலை உருவாகி உள்ளது. இந்த நிலையில் ஒரு சில ஓட்டல்கள் விறகு அடுப்பில் சமைக்க தொடங்கி விட்டனர். சில ஓட்டல்களில் விறகு அடுப்பு கட்டும் பணியும் நடந்து வருகிறது.இந்த நிலையில் சேலத்தில் உள்ள பெரும்பாலான டீக்கடைகளில் இன்று முதல் திடீரென டீ, காபி விலை உயர்ந்துள்ளது. அதன்படி அரை பார்சல் டீ இதுவரை ரூ. 20க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் ரூ.10 அதிகரித்து 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஒரு பார்சல் டீ இதுவரை ரூ.30க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் ரூ.10 அதிகரித்து ரூ. 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதே போல் ஒரு சில கடைகளில் பலகாரங்கள் விலையும் அதிகரித்துள்ளனர். இது குறித்து வாடிக்கையாளர்களுக்கு தெரியும் வகையில் டீக்கடைகள் முன்பு அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது. ",

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணி நிர்வாகிகள் பட்டியல்

## தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் வெளியிட்டார்.

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த மாதம் மாநில மகளிரணி, இளைஞரணி, மாணவரணி அமைப்பாளர்கள் அறிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாநில மகளிரணிக்கு திருமதி வாசுகி அவர்கள் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டு உள்ளனர். அதனை தொடர்ந்து தற்போது புதுச்சேரி மாநில இளைஞரணிக்கு நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளேன். அதில் புதுச்சேரி மாநில இளைஞரணிக்கு சபரி டிஜிட்டல் பிரிண்டர் உரிமையாளர் திரு. ராஜா அவர்கள் தலைமையில் நிர்வாகிகள் 14 பேரும், செயற்குழு உறுப்பினர்கள் 12 பேரும் மொத்தம் 26 பேர் கொண்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பட்டியல்.!!!.

தலைவர் : K. ராஜா துணைத் தலைவர்கள் : 1.கார்த்திக். 2.ஸ்ரீ அருள். பொதுச்செயலாளர்கள்: 1.சிவா. 2.பிரதீப் பொருளாளர் 1.வேலு . செயலாளர்கள் : 1.மணிகண்டன். 2.ஐயப்பன். இணைச் செயலாளர்கள் : 1.ஈஸ்வர். 2.சந்துரு.

உதவி செயலாளர்கள் : 1.ஆனந்து . 2.வேல்முருகன் . துணை செயலாளர்கள்: 1.அருண் . 2.மாதவன். மாநில செயற்குழு உறுப்பினர்கள். 1.மூர்த்தி. 2. செல்வம் . 3.ஐயனார். 4.விக்கி. 5.விமல் . 6.லோகேஷ். 7.A.K. அருண் .8.சம்பத்.

9.சாய் பிரசாந்த். 10.நிர்மல் குமார். 11.வினித். 12.ஞானவேல். மேற்கண்டவாறு மாநில இளைஞர் அணிக்கு 26 பேர் கொண்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களை ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் என்ற முறையில் வெளியிட்டுள்ளேன். ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் அனைவரும் மேலே அறிவிக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு

முழு ஒத்துழைப்பு கொடுத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# உருளையன்பேட்டையில் பாஜக மதன் ஏற்பாட்டில் எழுச்சியான தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்:

## மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன!



புதுச்சேரி: மார்ச்.13–

புதுச்சேரி உருளையன் பேட்டை தொகுதியில், பாரதிய ஜனதா கட்சியின் மாநில வர்த்தகப் பிரிவு இணை அமைப்பாளர் மதன் ஏற்பாட்டில்,மத்திய அரசின் சாதனைகளை விளக்கும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மற்றும் மகளிர் தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு உருளையன்பேட்டை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மூர்த்தி மற்றும் தொகுதி தேர்தல் ஒருங்கிணைப்பாளரும், மாநில ஆன்மீக மற்றும் ஆலய மேம்பாட்டுப் பிரிவு தலைவருமான சாய் சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்துகொண்ட வில்லியனூர் மாவட்ட பொறுப்பாளர் வெற்றி செல்வம் மற்றும் மத்திய அரசு நலத்திட்ட பிரிவு அமைப்பாளர் RS கண்ணன் ஆகியோர், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து விரிவாகச் சிறப்புரையாற்றினர். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு,மதன் அவர்களின் தலைமையில் தொகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்களுக்குப் புடவைகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கட்சியின் பல்வேறு பிரிவு நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்:

மகளிர் அணி: மாநிலச் செயலாளர் கீதா, எஸ்சி அணி அகிலா, மாவட்ட பொதுச் செயலாளர் பிரியா, தொகுதித் தலைவி இலக்கியா. தொகுதி நிர்வாகிகள்: பொதுச் செயலாளர் ராபர்ட், துணைத் தலைவர் விஜய் பாஸ்கர், செயலாளர் கார்த்திக். மாவட்ட – அணி நிர்வாகிகள்: அறிவுசார் பிரிவு அமைப்பாளர் அருள் பாலாஜி, பட்டிய லின அணி துணைத் தலைவர் அசோக்(எ)மணிவண்ணன், OBC அணி பிரியா. கிளை நிர்வாகிகள்: விநாயகம், முருகன், சதீஷ் உள்ளிட்ட கிளைத்தலைவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் வெற்றிவேல், கணபதி, அபிராமன், சூர்யா உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ரூ 2.66 கோடி மதிப்பீட்டில் சென்னலூர்பாடிப்பள்ளம் புதியதார்சாலை மேம்பாடு செய்வதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.




செஞ்சி.மார்ச்.13

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் செஞ்சி ஒன்றியம் சென்னாலூர் முதல் பாடிப்பள்ளம் செல்லும் சாலையில் 2/880 கி.மி புதியதார் சாலையை மேம்பாடு செய்வதற்கு பூமி பூஜை விழா பாடிப்பள்ளம் ஊராட்சி யில் நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் தாட்சயாயினி கார்த்தி கேயன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு நபார்டு திட்டத்தின் கீழ் 2 கோடியே 66 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை மேம்பாடு செய்வதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ் செழியன், விஜயராகவன், வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ், மாவட்ட கவுன்சிலர் அரங்கஏழுமலை,ஒன்றிய கவுன்சிலர் நாகராஜ், உதவி பொறியாளர் கற்பகம் பணி மேற்பார்வையாளர் சீதாராமன், வனத்துறை காவலர்கள் சம்பத்,சக்திவேல்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆனந்தன், ஒன்றிய நிர்வாகிகள்வாசு, அய்யா துரை, கோடீஸ்வரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, செஞ்சி மத்திய ஒன்றிய துணை அமைப்பாளர் கௌதமன் கார்த்தி கேயன்,ஊராட்சி நிர்வாகிகள் அலமேலு ராஜாராம்,செந்தாமரை கண்ணன், சங்கர், சென்னாலூர் மணி, கதிரவன், ஆனந்தன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில் உத்தரபிரதேசத்திலிருந்து வருகை தந்த துணை ராணுவப்படையினரின் திருவள்ளூரில் முக்கிய வீதிகள் வழியாக கொடி அணிவகுப்பு :

திருவள்ளூர் மார்ச் 13 :

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அனைத்து மாவட்டங்களிலும் துணை ராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதோடு அந்தந்த பகுதிகளில் கொடி அணிவகுப்பும் நடத்தப்படுகிறது. அந்த



வகையில் தேர்தல் முன்னேற்பாடு பணிகளும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள், பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் ஆகியோர் பணிக்கு தேர்வு செய்து தயாராக வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் உத்திரபிரதேசத்திலிருந்து வருகை தந்த துணை ராணுவ பாதுகாப்பு படை வீரர்கள் 80 பேர் இரவு வருகை தந்தனர். இந்த நிலையில் சட்டமன்றத் தேர்தலில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் நோக்கத்தில் துணை ராணுவப்படை வீரர்கள் திருவள்ளூரில் கொடி அணிவகுப்பு ஊர்வலம் நடத்தினர். இந்த அணிவகுப்பு காமரஜார் சிலை தொடங்கி, ராஜாஜி சாலை, வடக்கு ராஜவீதி உள்பட முக்கிய வீதிகள் வழியாக சென்று செங்குன்றம் சாலையில் நிறைவடைந்தது.



எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிடடு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குரிய வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கக் கூடிய பயிற்சி மையமான ரங்கம்பாளையம், கொங்கு கல்வி நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# சேலம் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் புதிய மதுக்கடை பொதுமக்கள் போராட்டம்.



சேலம். மார்ச்.13–

சேலம் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் மதுக்கடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டத் தில் ஈடுபட்ட பொது மக்களை போலீஸார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டம், ஓமலூர் வழியாக சேலம் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. கோட்டகவுண்டம்பட்டி கிராமம் வழியாக செல்லும் தேசிய நெடுஞ் சாலையில் புதன்கிழமை டாஸ்மாக் மதுக்கடை திறக்கப்பட்டு மது விற் பனை செய்யப்பட்டது. இங்கு தேசிய நெடுஞ் சாலை சுங்கச்சாவடி, 2 பெட்ரோல் விற்பனை நிலையம், பெரியார் பல்கலைக்கழகம், தனியார் மகளிர் கல்லூரி, அரசு பள்ளி, 2 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன.

இப்பகுதியில் கடை திறக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். இங்கு மதுக்கடை வேண்டாம், மது விற்பனை செய்யக்கூடாது என்று போராட்டம் நடத்திய பெண்களையும், முதியவர்களையும், கருப்பூர் காவல்நிலைய ஆய்வாளர் தவமணி கைதுசெய்து வாகனத்தில் ஏற்றினார்.

அனைவரையும் தனியார் மண்டபத்தில் அடைத்தனர். தொடர்ந்து சந்துக்கடை விற்பனையாளர்கள் பெட்டி பெட்டியாக மது வகைகளை வாங்கி சென்றனர். இந்த நிலையில், இங்கு மது வாங்கிய முதியவர் குடித்துவிட்டு போதையில் நெடுஞ் சாலையில் நடந்து சென்று இருசக்கர வாகனத்தில் சென்றவர்களை விபத்தில் சிக்க வைத்தார்.

மதுக்கடை திறந்த முதல் நாளிலேயே, மதுக்கடை முன்பாகவே தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டது. இதில், கருப்பனம் பட்டியை சேர்ந்த மணியின் மனைவி ரோஷன்பேகம் படு காயமடைந்தார். அவரை, அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் மீட்டு, டெம்போவில் ஏற்றி ஓமலூர் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். இக்கடையை வேறு இடத்திற்கு மாற்றா விட்டால் போராட்டம் நடத்தப்படும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

# பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறப்பட்டது..



கோவை மாநகராட்சி 35 வது வார்டுக்குட்பட்ட தேவாங்க நகர் காவேரி வீதியில் அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று சிறுவர் பூங்கா அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்காக மேற்கு மண்டல தலைவர் திருமதி தெய்வானை தமிழ்மறை மற்றும் கல்வி மற்றும் பூங்காக்கள் குழு தலைவர் திருமதி மாலதி நாகராஜ் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர், . உடன் 35 வது வட்ட மாமன்ற உறுப்பினர் சம்பத் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி அருகே பயங்கரம்:

# பிளஸ் 2 மாணவி கொலை: செல்வப்பெருந்தகை கண்டனம்!

தூத்துக்குடி: மார்ச்.13–

தூத்துக்குடி அருகே பிளஸ் 2 மாணவி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்டதற்கு செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்ததாவது; தூத்துக்குடி மாவட்டம், குளத்தூர் அருகே வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17வயது அரசு பள்ளியில் பயிலும் மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. பாதுகாப்பாக இருக்க வேண்டிய சமூகத்தில் இவ்வாறான மனிதாபிமானமற்ற செயல்கள் நடை பெறுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்த சம்பவம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து அதிகம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனை வழங்குவதன் மூலம் இத்தகைய குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



பாதிக்கப்பட்ட மாணவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசு தேவையான அனைத்து உதவிகளையும், ஆதரவையும் உடனடியாக வழங்க வேண்டும். மேலும், பெண்கள் மற்றும் மாணவிகள் பாதுகாப்பாக வாழும் சூழலை உருவாக்க அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் விரைவான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய கொடூர சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதவாறு கடுமையான கண்காணிப்பும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் உறுதி செய்யப்பட வேண்டும். தூத்துக்குடி மாணவிக்கு நடந்த இந்த மனிதநேயமற்ற பாலியல் பலாத்காரச் சம்பவத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நரிக்குறவர் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் : புதுவை தமிழ்ச் சங்க தலைவர் வழங்கினார்



வந்தவாசி, மார்ச் 13:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் நரிக்குறவ மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு இராஜா நந்திவர்மன் கல்லூரி தலைவரும், புதுவை தமிழ்ச் சங்க தலைவருமான கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ஏழுமலை வரவேற்றார்.

தெள்ளார் பகுதியில் வசிக்கும் நரிக்குறவர் குடும்பத்தினரை சேர்ந்த 50 மாணவர்களுக்கு நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் எழுது பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்டங் களை புதுவை தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் திருவண்ணா மலை திருக்குறள் தொண்டு மைய நிறுவனர் பாவலர் ப.குப்பன் பங்கேற்று, திருக்குறளின் மேன்மைகளை பற்றியும், நரிக்குறவ மாணவர்கள் திருக் குறளை வாசிப்பதற்கான பயிற்சியையும் அளித்தார். மேலும் திருவள்ளுவர் வேடமணிந்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்வில் வட்டார வள மைய பொறுப்பாளர் பாலாஜி வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் கல்லூரி பொருளாளர் எஸ்.பழனிச்சாமி நன்றி கூறினார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# செய்யாறு நடுநிலைப் பள்ளியில் உலக மகளிர் தின விழா..!



வந்தவாசி, மார்ச் 13;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, பரிதிபுரம் மேற்கு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் திருவத்திபுரம் நகராட்சியின் நகரங்களில் தூய்மைகளுக்கான மக்கள் இயக்கம் சார்பில் மகளிர் தினவிழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் பெண்களின் சிறப்பு குறித்து மாணவிகள் பாடல் பாடினர். இவ்வியக்கம் சார்பாக தலைமை ஆசிரியர் இரா.தேன்மொழி, ஆசிரிய பெருமக்களையும் பாராட்டி சால்வை அணிவிக்கப்பட்டது. பள்ளி சார்பாக தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்களை பாராட்டி இனிப்பும், எழுதுகோலும் வழங்கப்பட்டது .

# வீட்டுமனை இடம் அளவீடு



திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம் வடகவுஞ்சி கிராமம், உட்கடை செம்பிரான்குளம் பழங்குடியினர் கிராமத்தில் வீட்டுமனை இல்லாத பழங்குடி மக்களுக்கு, கொடைக் கானல் கோட்டாடசியர் திருநாவுக்கரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனி வட்டாடசியர் .ஜெயராஜன் அவர்களின் முயற்சியால் ஜீ. ஆர். டி. எஸ்டேட் நிர்வாகத்தினர் வீட்டுமனை இடம் தருவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர்.. அதே போன்று பெரியூர் கிராமத்தில் கோவிந்த ராஜ் அவர்கள் ஆ/தி நலத்துறைக்கு 1 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுப்பதாக கூறியிருந்த இடம், கவுச்சிக்கொம்பு வளவு கிராமத்தில் மக்கள் குடியிருக்கும் இடம் திமுக ஒன்றிய செயலாளர் கருமலை பாண்டியன் – சகோதர்கள் இடம் இவற்றை நிலக்கோட்டை ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை தனி வட்டாடசியர் அவர்களின் பெயரில் நிலத்தை பதிவு செய்து, அதன்பின் பழங்குடி மக்களுக்கு பட்டா வழங்கப்படும்,, இதற்காக நிலத்தை அளவீடு செய்யும் பணி இன்று தனி வட்டாட்சியர் திரு. ஜெயராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. உடன் நிலக்கோட்டை ஆ/தி நலம் தனி வருவாய் ஆய்வாளர் ஜான் பிரிட்டோ நில அளவையர்கள் தியாகராஜன், அழகு ராஜா, தாண்டிக்குடி வருவாய் ஆய்வாளர் முத்தையா, கே.சி. பட்டி கிராம நிர்வாக அலுவலர் செல்வராஜ், பெரியூர் கிராம நிர்வாக அலுவலர் கோகுல், ஜீ. ஆர். டி. நிர்வாகம் சார்பாக ரைட்டர் ஜெகநாதன், ஆரோக்கிய அகம் திட்ட ஒருங்கிணைப்பாளர் சதாசிவம், தன்னார் வாளர்கள் நாகசெல்வம், இலட்சுமி, மகாலட்சுமி, பெரியூர் முன்னாள் ஊ.ம. தலைவர் மாலையம்மாள் முருகானந்தம் மற்றும் பழங்குடியின மக்கள் கலந்து கொண்டனர்...

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421